அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:261/2015
தேதி: 27/10/2015

# ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பலியானவர்களுக்கு சமக நிறுவனர் – தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ இரங்கல்

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக இருநூறுக்கும் மேற்பட்டோர் பலியாகி இருப்பது மிக்க வேதனையளிப்பதாக உள்ளது. தொழில்நுட்பம் என்பது எவ்வளவுதான் எல்லைகளைத் தாண்டி விரிவடைந்தாலும், இயற்கைக்கு மீறிய சக்தி இல்லை என்பது இதுபோன்ற இடர்களில் நிரூபணமாகிறது. உலகின் எந்த ஒரு மூலையிலும் மனித இனத்திற்கு காயம் ஏற்பட்டால் மொழி, மத, இன வேறுபாடுகளைக் கடந்து துயரத்தில் பங்கேற்பதே மனிதப் பண்பு. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இரு நாடுகளுக்கும் இந்திய அரசு தாராளமாக அனைத்து விதமான உதவிகளையும் செய்திட வேண்டும். ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் நிலநடுக்கத்தால் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்